தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

1.03.2013 A.M

## நேரடி மானியத் திட்டம் நாடு முழுவதும் விரிவாக்கம்

புதுதில்லி, பிப்.28: உங்கள் பணம் உங்கள் கையில் என்ற நேரடி மானியத் திட்டத்தை நாடு முழுவதும் விரிவாக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து, பட்ஜெட்டில் கூறப்பட்டு இருப்பதாவது: ஏழைகளுக்கு மானியத்தை பணமாக வழங்கும் திட்டம் ஜனவரி மாதம் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் 11 லட்சம் ஏழைகள் பயனடைகின்றனர். இந்த திட்டம் விரைவில் நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும்.

உங்கள் பணம் உங்கள் கையில் என்ற கோட்பாடு மூலம், ஏழை மக்கள் தங்களுக்கான மானியப் பலன்களை தங்கள் வங்கிக் கணக்கு மூலம் பணமாகப் பெற்று மகிழ்ச்சி அடைகின்றனர். இந்த திட்டத்தை செயல்படுத்துவதில் உள்ள குறைபாடுகளை களைய அரசு நடவடிக்கை எடுக்கும்.

அனைத்துப் பயனாளிகளுக்கும் வங்கிகளில் கணக்குகள் தொடங்கப்படும். பயனாளிகளின் பட்டியல் சம்பந்தப்பட்ட வங்கிகளில் வைக்கப்படும். இதனால் முறைகேடுகள் தடுக்கப்படும் என்று பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாயக் கடன் ரூ.7 லட்சம் கோடி

வரும் நிதியாண்டில் (2013-14) வேளாண்துறைக்கு ரூ.7 லட்சம் கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது கடந்த நிதியாண்டைவிட ரூ.1.25 லட்சம் கோடி அதிகமாகும்.

வேளாண் துறை தொடர்பாக பட்ஜெட்டில் மேலும் பல அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன் விவரம்: உணவுப் பாதுகாப்பு மசோதாவை அமல்படுத்துவதற்காக ரூ.10 ஆயிரம் கோடி கூடுதல் மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

வேளாண்துறை அமைச்சகத்துக்கு 22 சதவீதம் கூடுதலாக ரூ.27,049 கோடி வழங்கப்படுகிறது. இதில் ரூ.3,415 கோடி வேளாண் துறை சார்பான ஆராய்ச்சிக்காக பயன்படுத்தப்படும்.

வங்கிகளில் பெறப்பட்டுள்ள குறுகிய கால பயிர் கடன்களுக்கும் வட்டி சலுகைகள் தொடரும். இதன் மூலம் உரிய நேரத்தில் கடன்களை திரும்பச் செலுத்தும் விவசாயிகள், மீண்டும் 4 சதவீத வட்டியில் வேளாண் கடன் பெற முடியும்.

வேளாண் துறைக்கு கூடுதல் கடனை அறிவித்துப் பேசிய ப.சிதம்பரம், "வேளாண் துறைக்கு வழங்கப்படும் கடன்தான் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கச் செய்கிறது. கடந்த நிதியாண்டில் (2012-13) ரூ.5 லட்சத்து 75 ஆயிரம் கோடி கடன் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் ரூ.7 லட்சம் கோடியாக வேளாண் கடன் இலக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கிராம வங்கிகள், கூட்டுறவு வங்கிகளில்தான் விவசாயக் கடன்களுக்கு வட்டி சலுகை அளிக்கப்பட்டு வந்தது. இனி தனியார் வங்கிகளிலும் விவசாயிகள் வட்டி சலுகை பெற முடியும்' என்று தெரிவித்தார்.

## வேளாண்துறையில் 3 புதிய திட்டங்களுக்கு நிதி

வேளாண் துறையில் 3 புதிய திட்டங்களுக்காக பட்ஜெட்டில் ரூ.1,007 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பசுமைப் புரட்சி மாநிலங்களான பஞ்சாப் மற்றும் ஹரியாணாவில் உற்பத்தித் தேக்கநிலை நிலவுகிறது. இதனால், அங்கு அதிகளவில் பயிர் செய்யப்படும் அரிசி மற்றும் கோதுமைக்கு மாற்றாக, மாற்றுப்பயிரிடலை ஊக்குவிக்கும் திட்டத்துக்காக ரூ.500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊட்டச் சத்து பற்றாக்குறையை தவிர்க்க, நுண்ணூட்டம் செறிந்த பயிர்களைச் சாகுபடி செய்யும் முன்னோடித் திட்டத்துக்கு ரூ.200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

கால்நடைத் தீவன உற்பத்தி மேம்பாட்டுக்காக, ரூ.307 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

## குறைகிறது மேட்டூர் நீர்மட்டம்



மேட்டூரிலிருந்து வினாடிக்கு 6 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்படுவதால், அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை 32.91 அடியாகக் குறைந்தது.

காவிரி டெல்டா மாவட்டங்களில் நெல் சாகுபடி முடிவடைந்ததும், ஆண்டுதோறும் ஜனவரி 28ஆம் தேதி அணையிலிருந்து பாசனத் தேவைக்காகத் தண்ணீர் திறக்கப்படுவது நிறுத்தப்படும். இதையடுத்து, குடிநீர்த் தேவைக்காக மட்டுமே அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படும்.

இந்த நிலையில், நிகழாண்டு காவிரி டெல்டா மாவட்டங்களில் நெல் சாகுபடி முடிந்த நிலையில், அணையிலிருந்து புதன்கிழமை முதல் வினாடிக்கு 6 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 623 கன அடியாக உள்ள நிலையில், அணையிலிருந்து கூடுதலாகத் தண்ணீர் திறக்கப்படுவதால், புதன்கிழமை 33.99 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், ஒரே நாளில் 1.08 அடி குறைந்து, வியாழக்கிழமை 32.91 அடியாக இருந்தது.

நீர்மட்டம் தொடர்ந்து குறைவதால், அணையில் உள்ள மீன்வளம் பாதிக்கும் என மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

### பெண்கள், விவசாயிகளுக்கானது: கருணாநிதி

பெண்கள், விவசாயிகள், தாழ்த்தப்பட்டோர், நலிந்தோர் வாழ்வை மையமாகக் கொண்டு மத்திய பட்ஜெட் அமைக்கப்பட்டுள்ளது என்று திமுக தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

இது தொடர்பாக வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை: மத்திய பட்ஜெட்டில் பெண்கள் முன்னேற்றத்துக்காக ரூ.93,134 கோடியும், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியின மக்களின் முன்னேற்றத்துக்கு ரூ.41,561 கோடியும், சிறுபான்மையினருக்கு கடந்த ஆண்டினைவிட 12 சதவீதம் அதிகப்படுத்தி ரூ.3,511 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்காக ரூ.110 கோடியும், மக்கள் நல்வாழ்வுத் துறைக்காக ரூ.37,330 கோடியும், கல்வித் துறைக்காக ரூ.55,867 கோடியும், வேளாண் துறைக்காக ரூ.27,049 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மகிழ்ச்சியை தரக்கூடியதாகும்.

விவசாயிகளுக்கு இந்த ஆண்டு ரூ.7 லட்சம் கோடி பயிர்க் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் பெரிதும் எதிர்பார்த்த தனி நபர் வருமான வரி விலக்குக்கான உச்ச வரம்பில் மாற்றம் இல்லை என்பது ஓரளவு ஏமாற்றத்தை அளிக்கும்.

பெண்களுக்கென ரூ.1,000 கோடி முதலீட்டில் தனி வங்கியும், ரூ.7,500 கோடி செலவில் தூத்துக்குடியில் புதிய துறைமுகமும் அமைய உள்ளது வரவேற்கக்கூடியதாகும்.

சேது சமுத்திரத் திட்டத்தையும் விரைந்து முடிக்க வேண்டும் என்று தமிழக மக்களின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

தவிர்க்க வேண்டியவை: பெட்ரோல் பொருள்களுக்கான மானியங்கள் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும், டீசல், சமையல் எரிவாயுவின் விலை சர்வதேச சந்தை நிலவரங்களுக்கேற்ப உயர்த்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் புதன்கிழமை தாக்கல் செய்யப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இது ஏற்றுக்கொள்ளப்பட்டால், விலைவாசிகள் மேலும் உயர்வதற்கு வாய்ப்புகள் இருப்பதால் அவசியம் தவிர்க்கப்பட வேண்டும்.

காய்கறிகளின் விலை 26 சதவீதமும், உணவு எண்ணெயின் விலை 15 சதவீதமும், இறைச்சி, மீன், முட்டை விலை 14 சதவீதமும், பருப்பு வகைகள் மற்றும் நவதானியங்களின் விலை 15 சதவீதமும், சர்க்கரை விலை 13 சதவீதமும் உயர்ந்துள்ள நிலையில் மத்திய அரசின் பட்ஜெட் எந்த அளவுக்கு விலைவாசிகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

செல்போன் உபயோகிப்போரின் எண்ணிக்கை பெருகும் நிலையில், அதற்கு 6 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது. இப்படி சில குறைகள் இருந்தாலும், பெண்கள், விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மக்கள் நலிந்தோர் வாழ்வை மையமாகக் கொண்ட பட்ஜெட்டாகும் என்று கருணாநிதி கூறியுள்ளார்.

**20.02.2013 P.M**

---

**ராஜபாளையம் பகுதியில் நெல் விலை சரிவு**

ராஜபாளையம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் கடந்த வாரம் பெய்த மழையால் நெல் விலை சரிவடைந்துள்ளது.

ராஜபாளையம், சிவகிரி வட்டாரப் பகுதியில் கடந்த வாரத்தில் சில நாள்கள் பரவலாக மழை பெய்தது. இந்த மழையால் அறுவடைக்குத் தயாரான நெல் வயல்களில் ஈரம் ஏற்பட்டதாலும், தண்ணீர் தேங்கி, சகதியாக இருந்ததாலும் நெல் அறுவடை இயந்திரம் மூலம் அறுவடை மேற்கொள்ள முடியவில்லை. இதனால் விவசாயிகள் கூடுதல் கட்டணம் செலுத்தி, பெல்ட் மாடல் அறுவடை இயந்திரம் மூலம் நெல் அறுவடை மேற்கொண்டனர். இதனால் விவசாயிகளுக்கு நெல்

அறுவடைக்கான செலவு அதிகரித்துள்ளது.

இந்நிலையில் மழையால் நெல் அதிக ஈரப்பதம் ஆனதால் நெல் விலை மூடைக்கு ரூ. 200 வரை குறைந்துள்ளது. 72 கிலோ கொண்ட ஒரு மூடை நெல் ஆந்திரா பொன்னி, எல்.எல்.ஆர். ரூ. 1500க்கு விற்றது, தற்போது ரூ. 1300ஆக சரிவடைந்தள்ளது.

இதுபோல் திருச்சி-1, சி.ல்.ஆர். ரக நெல்மூடைக்கு ரூ. 1200க்கு விற்றது, தற்போது ரூ. 1,000மாக சரிவடைந்துள்ளது. வைக்கோல் விலையும், ஏக்கருக்கு ரூ. 4000 ஆக இருந்தது, தற்போது ரூ. 1,900 ஆக சரிவடைந்து விட்டது. இதனால் தற்போது பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக ராஜபாளையம், சேத்தூர் பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## ஜூன், ஜூலை மாதங்களில் மலர்கள் நடவு செய்தால் கூடுதல் மகசூல்!



தருமபுரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் ஜூன், ஜூலை மாதங்களில் மலர்கள் நடவு செய்தால் கூடுதல் மகசூலும், அதிக வருவாயும் பெறலாம்.

சாமந்தி: கோ1, கோ2 எம்டியு 1 ரகங்களை பயிரிடலாம். நடவுக்கு ஏற்ற பருவம் ஜூன், ஜூலை மாதம். ஹெக்டேருக்கு தொழு உரம் 25 டன், தழை, மணி, சாம்பல் சத்து முறையே 62.5, 120, 25 கிலோ என்ற அளவில் அடியுரமாகவும், 30 நாள்களுக்குப் பிறகு தழைச்சத்து 62.5 கிலோ மேல் உரமாகவும் இட வேண்டும்.

கணிசமான மகசூல் பெற ஜிப்ரலிக் அமிலத்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 50 மில்லி கிராம் என்ற அளவில் கரைத்து நடவு செய்த 30, 45 மற்றும் 60 நாள்களில் தெளிக்க வேண்டும். இலைப்பேன், அசுவிணி, இலைப்புழுக்கள் ஆகியவற்றை கட்டுப்படுத்த டிரையசோபாஸ் 2 மில்லி, தயாமெதாக்ஸம் ஒரு மில்லி என்ற அளவில் ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்துத் தெளிக்கலாம்.

வேர் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த காப்பர் ஆக்ஸி குளோரைடு 2.5 கிராம் என்ற அளவில் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் மாங்கோசெப் 2 கிராம் கலந்து தெளிக்க வேண்டும்.

சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை, சபரிமலை சீசன்களுக்கு பூ அறுவடை வரும் வகையில் திட்டமிட்டு சாமந்தி சாகுபடி செய்தல் அதிக வருவாய் பெறலாம்.

பூக்களை மூட்டை அல்லது கூடை அளவுகளில் விற்பனை செய்யாமல் எடை அளவில் விற்பனை செய்வதன் மூலம் அதிக லாபம் பெறலாம்.

செண்டுமல்லி: மதுரை 1, உள்ளூர் மஞ்சள், ஆரஞ்சு வகை ஈஸ்ட், வெஸ்ட் (வீரிய ரகம்) ஆகிய ரகங்களை பயிரிடலாம். நடவுக்கு ஏற்ற பருவம் ஜூன், ஜூலை மாதம். ஹெக்டேருக்கு 1.5 கிலோ விதைகள் போதுமானது. தொழுஉரம் 75 டன், தழை, மணி, சாம்பல் சத்து முறையே 45, 90, 75 கிலோ என்ற அளவில் அடியுரமாகவும், 45 நாள்களுக்குப் பிறகு தழைச்சத்து 45 கிலோ மேல் உரமாகவும் இட வேண்டும்.

சிவப்பு சிலந்தியைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் கெல்தேன் ஒரு மில்லி கலந்து தெளிக்க வேண்டும். பண்டிகை காலங்களில் பூ அறுவடை செய்யும் வகையில் திட்டமிட்டு சாகுபடி செய்தால் அதிக லாபம் பெறலாம்.

நிலசம்பங்கி: மெக்ஸிகோ, பூனா, கொல்கத்தா, பெங்களூர், சிங்கார், ஹானி, பிரஜ்வாஸ் ரகங்களை பயிரிடலாம். ஜூன், ஜூலை மாதம் நடவுக்கு ஏற்ற பருவம். கிழங்குகள் அறுவடை செய்த பிறகு 30 நாள்கள் கழித்து நடவு செய்ய வேண்டும். கிழங்குகளை நடுவதற்கு முன்பாக வளர்ச்சி ஊக்கிகளில் நனைத்து நடவு செய்தால் நல்ல விளைச்சலைப் பெறமுடியும்.

ஹெக்டேருக்கு தொழு உரம் 25 டன், தழை, மணி, சாம்பல் சத்து முறையே 25, 60, 60 கிலோ என்ற அளவில் அடியுரமாக இட வேண்டும். பின்னர், 3ஆவது, 6ஆவது, 9ஆவது மாதங்களில் தழைச்சத்து 25 கிலோ மேல் உரமாக இட வேண்டும். ஜிப்ரலிக் ஆசிட் 3 மருந்தை லிட்டருக்கு 2 கிராம் அளவில் தண்ணீரில் கலந்து தெளிப்பதால் பூங்கொத்துகளின் நீளத்தையும், மலர்களின் எண்ணிக்கையும் அதிகப்படுத்தலாம்.

நூற்புழுத் தாக்குதலைக் கட்டுப்படுத்த கார்போபியூரான் 3ஜி குருணை மருந்தை ஒரு செடிக்கு ஒரு கிராம் அளவில் வேர்ப்பகுதியைச் சுற்றி இட்டு உடனடியாக நீர் பாய்ச்ச வேண்டும்.

குண்டுமல்லி: ஹெக்டேருக்கு வேர்விட்ட குச்சிகள் மற்றும் பதியன்கள் 6,400 எண்ணிக்கையில் தேவைப்படும். செடி ஒன்றுக்கு 60 கிராம் தழைச்சத்து 120 கிராம் மணிச்சத்து மற்றும் 120 கிராம் சாம்பல் சத்து கொடுக்கக் கூடிய ரசாயன உரங்களை இரு பகுதிகளாகப் பிரித்து கவாத்து செய்வதுடன் ஒருமுறையும், ஜூன், ஜூலை மாதத்தில் மறுமுறையும் செடியைச் சுற்றி இட்டு மண்ணோடு கலக்கச் செய்ய வேண்டும்.

தரையிலிருந்து 50 செ.மீ. உயரத்தில் நவம்பர் இறுதி வாரத்தில் மல்லிகைச் செடிகளை கவாத்து செய்யும்போது நோயுற்ற, உலர்ந்த குச்சிகள் மற்றும் குறுக்காக வளர்ந்த கிளைகளையும் வெட்டிவிட்டு சூரிய ஒளி நன்குபடும் வகையில் வசதி ஏற்படுத்த வேண்டும்.

மொட்டுப் புழுக்கள், இளம் மொட்டுக்களை தாக்கி பெருத்த சேதம் உண்டுபண்ணும். தையோடிகார்ப் 1.5 கிராம் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

சிலந்தி பூச்சியைக் கட்டுப்படுத்த நனையும் கந்தகம் 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

இரும்புச் சத்து குறைபாடு, வேர் அழுகல், வேர்ப் புழுத் தாக்குதலால் இலைகள் மஞ்சளாகும். இதைத் தடுக்க லிட்டருக்கு 5 கிராம் பெர்ரஸ்சல்பேட் கரைசலை 3 மாதத்துக்கு ஒரு முறை தெளிக்க வேண்டும். வேர் அழுகலுக்கு காப்பர் ஆக்ஸி குளோரைட் 2.5 கிராம் என்ற அளவில் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து கரைசல் தயாரிக்க வேண்டும்.

இந்தக் கரைசலை செடியிச் சுற்றி மண்ணில் ஊற்ற வேண்டும். நல்ல வடிகால் வசதியுள்ள நிலங்களில் குண்டு மல்லியை பயிர் செய்வதன் மூலம் நோய் வராமல் கட்டுப்படுத்தலாம். ஹெக்டேருக்கு 8,750 கிலோ வீதம் ஆண்டுக்கு மகசூல் கிடைக்கும்.

## நெல்லியில் நிறைவான மகசூல் பெற வழிகள்!



தற்போது பல்வேறு இடங்களிலும் நெல்லி காய்ப்புப் பருவத்தில் உள்ளது. நெல்லியில் ஏற்படும் பல்வேறு பூச்சி, நோய்களை முறையாகக் கட்டுப்படுத்தி மகசூல் இழப்பைத் தவிர்க்க வேண்டியது முக்கியமான பணி.

இது குறித்து சேரன்மகாதேவி தோட்டக்கலை உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பூச்சிகள்:

அ. பட்டைத்துளைப்பான்- சரியாகப் பராமரிக்கப்படாத மரங்களை இப் பூச்சி தாக்கும். ஏப்ரல் மாதத்தில் இதன் தாக்குதல் அதிகமாக காணப்படும். தாய் அந்துப்பூச்சி மரப்பட்டையின் பள்ளம் மற்றும் காயம்பட்ட இடத்தில் முட்டையிடும். எனவே மரப்பட்டையில் அரிவாளை குத்துதல் மூலம் காயம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

புழு வெளியாகி, துளைத்து உள்ளே செல்லும். இதன் தாக்குதலால் கிளைகளின் வளர்ச்சி தடைபடும். மகசூல் பருவங்களில் பூ பிடிப்பது குறையும். தாக்குதல் தீவிரமானால் கிளைகள் காய்ந்து, மரமே இறக்கக்கூடும். தாய் அந்து இலைக் கோணங்களில் முட்டையிடுவதால், துவாரமும் கிளை பிரியும் கோணங்களில் காணப்படும்.

கட்டுப்பாடு: காய்ந்த தாக்கப்பட்ட பகுதிகளை அகற்றித் தோட்டத்தை சுத்தமாகப் பராமரிக்க வேண்டும். விளக்குப் பொறி வைத்து தாய் அந்துப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம். ஈரமான கழிவுகள் இருக்கும்போது துளைக்குள் முனை வளைந்த கம்பியைச் செலுத்தி, புழுவை வெளியே எடுத்து அழிக்கலாம். உயிரியல் பூஞ்சாண கொல்லி பெவேரியா பேசியானா தெளித்தும் கட்டுப்படுத்தலாம்.

சேதம் அதிகமாகும்போது துளைகளில் பஞ்சில் 5 மிலி டைகுளோர்வாஸ் மருந்தை நனைத்து, உள்ளே வைத்து துளையை மண் கொண்டு அடைக்க வேண்டும்.

ஆ. தண்டு வீங்கி - செடிகளிலும், மரங்களிலும் தண்டு வீங்கி முடிச்சு போலக் காணப்படும். இதனால் வளர்ச்சி பாதிக்கப்பட்டு, பூ, காய் பிடிப்பது பாதிக்கப்படும்.

கட்டுப்பாடு: தொடர்ந்து தாக்குதல் தென்பட்டால், மானோகுரோட்டோபாஸ் மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 1.5 மிலி வீதம் கலந்து 15 நாள்கள் இடைவெளியில் இருமுறை தெளிக்க வேண்டும்.

இ. பழத்துளைப்பான்- இப்புழுவின் தாக்குதல் காய்ப்பிடிப்புப் பருவத்தில் காணப்படும். பழுப்பான கருநீல நிற வண்ணத்துப் பூச்சி வெள்ளைநிற முட்டையை, இளம் காய்களில் தனித்தனியாக இடுகிறது. முட்டையிலிருந்து வெளிவரும் புழு பழத்தைத் துளைத்து விதையை உண்டு சேதப்படுத்தும். இதனால் பழங்கள் தரம் குறைந்து அழுகி வெம்பி விழுந்து விடும். இது நேரிடை மகசூல் இழப்பை ஏற்படுத்தும்.

கட்டுப்பாடு - நெல்லி மரங்களுக்கு அருகில் கொய்யா, மாதுளை பயிரிடுவதைத் தவிர்க்க வேண்டும். தாக்கப்பட்ட பழங்களைச் சேகரித்து அழிக்க வேண்டும். டிரைகோகிரம்மா ஒட்டுண்ணிகளை ஏக்கருக்கு 1,00,000 வீதம் விட்டு பழத்துளைப்பான் முட்டைகளை அழிக்கலாம். பூ பிடிக்கும் காலங்களில் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவீதம் அல்லது வேப்பெண்ணெய் 2 சதவீதம் அல்லது வேம்பு சார்ந்த மருந்தை 15 நாள் இடைவெளியில் 4 முறை தெளிக்க வேண்டும்.

தாக்குதல் அதிகமாகும்போது ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1.5 மிலி மானோகுரோட்டோபாஸ் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

நோய்கள்: அ. துருநோய்- பழங்களில் சிறு புள்ளிகள் முதலில் தோன்றிய பின் வளையம்போல் வட்டமாக உருவாகும். இவை இணைந்து பழத்தின் பெரும்பகுதி கருப்பாக மாறிவிடும். நோய்த் தாக்குதல் இலைகளில் தோன்றும்போது சிவந்த பழுப்பு நிற துரு புள்ளிகள் சிதறியது போன்றோ அல்லது கூட்டமாக சேர்ந்தோ காணப்படும்.

துருநோய் இலைகளைத் தாக்கினால் பழங்களில் தாக்குதல் இருக்காது. அதுபோல் பழங்களை தாக்கினால் இலைகளில் தாக்குதல் இருக்காது. இதற்கு நனையும் கந்தகம் மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 5 கிராம் வீதம் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

பறவைக்கண் புள்ளிநோய் - இலைகளில் வட்ட வடிவ பழுப்பு நிறப்புள்ளிகள் மஞ்சள் நிற விளிம்புகளுடன் தோன்றும். தாக்குதல் தீவிரமாகும்போது கனிகள் சுருங்கி அழுகிவிடும்.

ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் மாங்கோசெப் அல்லது ஒரு கிராம் கார்பண்டசிம் கலந்து தெளிக்கவும்.

கனிகளின் வெளிப்புறம் நன்கு தோற்றமளித்தாலும், உள்பகுதிகளில் தீய்ந்த பழுப்புநிறச் சதைப்பகுதி காணப்படும். பின் கரும்பழுப்பாகி கடின பிசின் போல் மாறிவிடும். என்.ஏ. 6, என்.ஏ. 7 ரகங்களில் இக்குறைபாடு தோன்றுவதில்லை.

எனவே ஒரு லிட்டர் நீருக்கு 4 கிராம் துத்தநாக சல்பேட், 4 கிராம் போராக்ஸ் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம். இத்தகைய பயிர் பாதுகாப்பு முறைகளை முறையாக்கி கையாண்டு நெல்லியில் நிறைவான மகசூல் பெறலாம் என்றார் அவர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

1.03.2013 A.M

## தொழில், விவசாய வளர்ச்சிக்கு திட்டம் ஏதுமில்லை :பட்ஜெட் குறித்து ஆர்வலர்கள் வருத்தம்

ஈரோடு: தொழில், விவசாய வளர்ச்சிக்கு எந்த திட்டமும் இல்லை, என பொது ஆர்வலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மத்திய நிதியமைச்சர் சிதம்பரம் நேற்று தாக்கல் செய்த பட்ஜெட் குறித்து பல்வேறு விமர்சனம் எழுந்துள்ளது.

ஈரோடு மாவட்ட அனைத்து தொழில், வணிக சங்க கூட்டமைப்பு தலைவர் சிவநேசன்:

புதிய திட்டங்கள் இல்லை.

காற்றாலைகளில் உற்பத்தியுடன் இணைந்த மானியம், ஊரக வளர்ச்சி திட்டத்துக்கு கடந்த பட்ஜெட்டைவிட, 46 சதவீதம் அதிகம் கொடுத்துள்ளது ஏற்புடையது.

"டஃப்' திட்டம் தொடரும் என்ற அறிவிப்புடன், ஜவுளித்திட்டத்துக்கு, 2,400 கோடி ஒதுக்கியது வரவேற்க்கத்தக்கது.

பெண்களுக்கென தேசிய மய வங்கி (உமன்ஸ் பேங்க்), ஆயிரம் கோடி முதலீட்டுடன் இந்தாண்டு துவங்கப்படும் என்பதும் வரவேற்க்கத்தக்கது.

தனி நபர் வருமான வரியில் எந்த மாற்றமும் செய்யாமல், ஐந்து லட்சம் ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களுக்கு, தங்கள் வருமான வரியில், இரண்டாயிரம் ரூபாய் வரை கிரெடிட் எடுத்துக்கொள்ளலாம் என்பது ஏற்புடையதல்ல.

கலால் வரி, சேவை வரியில் எந்த மாறுதலும் இல்லை.

சிறு தொழில்களுக்கு வட்டி குறைக்கப்படும் என எதிர்பார்த்தபோது, கைத்தறித்துறைக்கு மட்டும், 6 சதவீதம் வட்டி இருக்கும் என கூறி இருப்பது, இத்தொழிலை ஊக்குவிக்காது.

உள்கட்டமைப்பில், 3,000 கோடி ரூபாய் சாலை போடும் திட்டத்தில், தமிழகம் சேர்க்கப்படாமல் உள்ளது.

சென்னை, பெங்களூர் வழியில் தொழில் முனையம் அமைக்கப்படும் என்பதை வரவேற்றாலும், கடந்த பட்ஜெட்டில் அறிவித்த சேலம், கோவை முனையம், மதுரை, கன்னியாகுமரி முனையம்

குறித்து, எந்த நிதியாதாரமும் அறிவிக்காமல், புதிதாக இரண்டு அறிவிக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் தொழிலுக்குள் அனுகூலம் செய்யாத பட்ஜெட்டாகும், என்றார்.

பா.ஜ.க., மாநில பிரச்சார அணித்தலைவர் சரவணன்: மத்திய அரசு அறிவித்துள்ள பட்ஜெட்டில் விலைவாசி குறைப்புக்கு எந்த நடவடிக்கையும் இல்லை. நாட்டின் வளர்ச்சி விகிதம் காணல் நீராகும்.

கடந்தாண்டு, 6.9 சதவீத வளர்ச்சி விகிதம் நிர்ணயம் செய்த நிலையில், 5 சதவீத வளர்ச்சியை எட்ட முடிந்தது. ரூபாய் மதிப்பை கட்டுப்படுத்த திட்டம் ஏதுமில்லை.

அந்நிய செலாவணி மூலம் ரூபாய் மதிப்பை கட்டுப்படுத்த பெட்ரோல் விலையை உயர்த்தியுள்ளனர். அதேசமயம் பணவீக்கம் அதிகமுள்ள நிலையில், வருமான வரியின் உச்ச வரம்மை உயர்த்தவில்லை.

சினிமாவுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்ட நிலையில், அத்யாவசிய தேவையான செல்ஃபோனுக்கு, 6 சதவீத வரி அறிவித்துள்ளனர். ரயில்வே பட்ஜெட்டில், 6.8 சதவீதம் வரியை உயர்த்தியதால், கட்டுமான பொருட்களான சிமெண்ட், இரும்பு விலை உயரக்கூடும்.

தமிழக முதல்வர், மத்திய அரசுக்கு கொடுத்த திட்டங்கள் ஏதும், பட்ஜெட்டில் அறிவிக்கவில்லை. 2014 தேர்தலை மனதில் வைத்து தயாரிக்கப்பட்ட பட்ஜெட்டாகும், என்றார்.

கீழ்பவானி பாசன சபை தலைவர் நல்லசாமி: பத்தோடு, 11 ஆன பட்ஜெட். பெரிய அளவில் எந்த மாற்றங்கள், திட்டங்கள் இந்த பட்ஜெட்டில் இல்லை. விவசாயத்துக்கு கடன் தொகையாக, ஏழு லட்சம் கோடி வழங்குவதாக அறிவித்துள்ளது.

ஆனால், கடனுதவி உயர்ந்த அளவு, விவசாயிகளின் வாழ்க்Ø க தரம் உயரவில்லை. விவசாயிகளுக்கு தேவை கடனுதவி இல் லை. விவசாய பொருட்களுக்கு கட்டுப்படியான விலைதான்.

ஏழு ஆண்டில், இரண்டரை லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். மக்களிடம் கையேந்தி தான் அரசாங்கம் நடக்க வேண்டும். ஆனால், விவசாயிகளை கையேந்த வைக்க, இந்த அரசாங்கம் நினைக்கிறது.

கடன் உயர்ந்தால், தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். விவசாய பொருட்களுக்கு, கட்டுப்படியான விலையை, மத்திய அரசு அறிவிக்க வேண்டும். அல்லது நாடு முன்னேறாது, என்றார்.

## வைகை அணையில் காய்த்துகுலுங்கும் மாமரங்கள்

ஆண்டிபட்டி:வைகை அணையில் மாமரங்கள் காய்த்துக்குலுங்குவதால், டெண்டர் எடுத்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வைகை அணையில், பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடங்களில் 300க்கும் மேற்பட்ட மாமரங்கள் உள்ளன. அல்போன்சா, செந்தூரம், பங்கனப்பள்ளி, கல்லா வகை மாமரங்களின் மகசூல் பொதுப்பணித்துறை மூலம் டெண்டர் விடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு மாமரங்கள் பூத்து காய் எடுக்கும் நிலையில் ஏற்பட்ட சூறாவளியால் கடுமையான பாதிப்பு ஏற்பட்டது. இந்த ஆண்டு மாமரங்கள் முன்கூட்டியே காய்த்துள்ளன. தற்போது காய்த்துக்குலுங்கும் மாமரங்கள் டெண்டர் எடுத்தவர்களுக்கு, மகிழ்ச்சி ஏற்படுத்துவதாக உள்ளது. கரட்டுப்பட்டியைச்சேர்ந்த விவசாயி அறிவழகன் கூறியதாவது: இந்த ஆண்டு மாமரங்களில் பூக்கள் உதிர்வதை தவிர்க்க, முன்கூட்டியே ஆறு முறை மருந்து தெளிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு சூறைக்காற்றால் மகசூல் பாதிப்படைந்தது. இந்த ஆண்டு எதிர்பார்த்த மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. அடுத்த மாதம் முதல் மாமரங்களில் காய்கள் பறிக்கலாம்,என்றனர்.

## பாசிப்பயறு, உளுந்துக்கு"காணாமல்' போன மானியம்

கம்பம்:கம்பம் விவசாயத்துறை அலுவலகத்தில், மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய, பாசிப்பயறு மற்றும் உளுந்து விதைகள், முழுவிலையில் விற்கப்படுவதால் விவசாயிகள் புலம்பி வருகின்றனர். தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழை ஏமாற்றி விட்டது. இதனால் கம்பம் பள்ளத்தாக்கில் ஒரு போக நெல் விவசாயம் கைவிடப்பட்டது. குடிநீருக்கு கூட கடும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், கடந்த வாரம் மிதமான மழை சில நாட்களுக்கு கிடைத்தது. இந்த மழையை பயன்படுத்தி, நெல் வயலில் பாசிப்பயறு மற்றும் உளுந்து விதைக்க விவசாயிகள் ஆர்வத்துடன் களம் இறங்கி விட்டனர். விவசாயத்துறை அலுவலகங்களில் விதை இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு விற்பனை ஜரூராக நடைபெறுகிறது. ஆனால் உளுந்து மற்றும் பாசிப்பயறுக்கு அரசு தரும் மானியம் 50 சதவீதம் என்ன ஆனது, என்று தெரியவில்லை. விவசாயத்துறையினர் கூறியதாவது: " விதை சான்று இன்னும் பெறவில்லை. பாசிப்பயறு மற்றும் உளுந்து சாம்பிள், தேனியில்உள்ள விதை பரிசோதனை கூடத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அங்கிருந்து ரிசல்ட் வந்தவுடன், மானியத்துடன் தரப்படும்' என்கின்றனர்.இப்போதே பெரும்பாலான விவசாயிகள் விதைகளை பெற்று சென்றுவிட்டனர். பரிசோதனை கூடத்தில் இருந்து வந்த ரிசல்ட் திருப்திகரமாக இல்லை என்றால், அதிகாரிகளால் என்ன செய்ய முடியும். அது மட்டுமின்றி, விதைகளை வாங்கிச் சென்ற

விவசாயிகளுக்கு சேர வேண்டிய மானியத்தை எப்போது, எப்படி வழங்குவார்கள்?. இது போன்ற கேள்விகளுக்கு அதிகாரிகள் பதில் தர மறுக்கின்றனர். இது மட்டுமின்றி, தனியார் கடைகளுக்கு மொத்தமாக விதைகளை விற்பனை செய்யப்படுவதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இணை இயக்குநர் விதை விற்பனையில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள், அரசு வழங்கும் மானியம் போன்ற விபரங்களை விவசாயிகள் அறிந்து கொள்ளும் வகையில் அறிவிப்பு செய்ய வேண்டும்.

## வேளாண்மை கல்லூரியில் புத்தக கண்காட்சி

வல்லநாடு : கிள்ளிக்குளம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் புத்தக கண்காட்சி நடந்தது. ஒவ்வொரு ஆண்டும் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் புத்தக கண்காட்சி மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பயன்பெறும் வகையில் நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டிற்கான புத்தக கண்காட்சியை கல்லூரியின் முதல்வர் அரியவனம் காத்தம் துவக்கி வைத்தார். புத்தக கண்காட்சியில் புதுடெல்லி, பெங்களூர், திருவனந்தபுரம்,கோயம்புத்தூர், காரைக்குடி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களிலிருந்து முன்னணி புத்தக விற்பனையாளர்கள் கலந்து கொண்டனர். இதில் சுமார் ஐம்பதாயிரம் புத்தகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. இந்திய மற்றும் சர்வதேச பதிப்பு புத்தகங்கள் பற்றிய தெளிவு பெறுவதற்கு மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கு இந்த புத்தக கண்காட்சி பயன்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை கல்லூரியின் இணை நூலகர் வண்ணமுத்து செய்திருந்தார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

1.03.2013 A.M

## விவசாயிகளுக்கு உயிர் உரங்கள்

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவில் பகுதியில் தானே புயலால் பாதிக்கப்பட்ட வாழை, வெற்றிலை பயிர் செய்த விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை சார்பில் உயிர் உரங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு தோட்டக்கலை உதவி இயக்குநர் மோகன்தாஸ் தலைமை தாங்கி விவசாயிகளுக்கு உயிர் உரங்களான அஸோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, சூடோமோனாஸ், டிவிரிடி ஆகியவற்றை வழங்கினார். இந்நிகழ்ச்சி திருச்சின்னபுரம், ஓமாம் புலியூர், முட்டம், பழஞ்சநல்லூர், கொண்டசமுத்திரம் ஆகிய பகுதிகளில் நடந்தது. இதில் உதவி தோட்டக்கலை அலுவலர்கள் ஆனந்தன், நீலகண்டன், இன்பம் ஆகியோர் கலந்து கொண்டனர். –

## ஜம்னாமரத்தூரில் விவசாயிகளுக்கு ஊட்டச்சத்து மேம்படுத்துதல் கருத்தரங்கு -

போளூர், : ஜமனாமரத்தூரில் சிறுதானிய உற்பத்தி மூலம் ஊட்டச்சத்து மேம்படுத்துதல் குறித்து கருத்தரங்கு நடந்தது.

திருவண்ணாமலை மாவட்டம் ஜம்னாமரத்தூரில் வேளாண்மைத் துறை மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிறுதானிய உற்பத்தி மூலம் ஊட்டச்சத்து மேம்பாடு குறித்து மாவட்ட அளிவிலான கருத்தரங்கு நடந்தது. வேளாண்மை அலுவலர் சித்ரா வரவேற்று பேசினார். ஜமனாமரத்தூர் ஒன்றிய குழு தலைவர் ராஜ மாணிக்கம், மாவட்ட கவுன்சிலர் மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சக்கரவர்த்தி கருத்தரங்குக்கு தலைமை தாங்கி பேசுகையில் சிறுதானிய உற்பத்தியை பெருக்குவதற்கான தொழில் நுட்பங்கள் பற்றி விளக்கமான எடுத்துரைத்தார். மேலும் மலைவாழ் மக்களுக்கு வேளாண்மைத் துறையின் சார்பில் அளிக்கப்படும் மானிய திட்டங்கள் குறித்தும். விதை பண்ணை அமைப்பது குறித்தும் விளக்கினார்.

பயிற்சியில் ஜம்னாமரத்தூர் பகுதியை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு சிறுதானியங்கள் மூலம் ஊட்டச்சத்து தயாரிப்பது குறித்த கையேடு அளிக்கப்பட்டது.

இதில் வேளாண்மை உதவி இயக்குநர்கள் கண்ணகி, பேபிபர்வதம், ஊராட்சி மன்ற தலைவர்கள்

சாமிநாதன் (கானமலை), தமிழ்ச்செல்வி ராமஜெயம் (கோவிலூர்), உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் துணை வேளாண்மை அலுவலர் சுப்பிரமணி நன்றி கூறினார். –

## நத்தம் விவசாயிகள் பட்டறிவு பயணம்

திண்டுக்கல், : நத்தம் வட்டார விவசாயிகள் 50 பேர், வேளாண் பொறியியல் துறை சார்பில் பட்டறிவு பயணமாக திருச்சி வேளாண் கண்காட்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.
அங்கு பல்வேறு தலைப்புகளில் நடைபெற்ற கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட விபரங்களை பதிவு செய்து கொண்டனர். தமிழ்நாடு வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், கரும்பு ஆராய்ச்சி நிலையம், பருத்தி ஆராய்ச்சி நிலையம், மத்திய நெல் ஆராய்ச்சி நிலையம் சார்பில் பல்வேறு தொழில்நுட்ப விபரங்கள் தெரிவிக்கப்பட்டன.
திருச்சி வேளாண் பொறியியல் துறை சார்பில் வேளாண் கருவிகள் 50 சதவீத மானியத்தில் பெறுவதற்கான வழிமுறை குறித்து விளக்கப்பட்டது. சோலார் சக்தியில் இயங்கும் விவசாய மோட்டார் மற்றும் மின் உபகரணங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. கரும்பு வெட்டும் கருவி, அறுவடை செய்யும் கருவி உள்ளிட்டவற்றை விவசாயிகள் பார்வையிட்டனர்.
ஏற்பாடுகளை உதவி செயற்பொறியாளர் ராஜ்மோகன், இளநிலை பொறியாளர் முனியப்பன் செய்திருந்தனர். அட்மா திட்ட தொழில்நுட்ப அலுவலர் பிரபு உட்பட பலர் கலந்து கொண்டனர். –

## ரூ.1.25 லட்சம் கோடி விவசாய கடன் அதிகரிப்பு




புதுடெல்லி : விவசாய கடன் தொகை கடந்த ஆண்டை விட ரூ.1.25 லட்சம் கோடி அதிகரிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு ரூ.7 லட்சம் கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பட்ஜெட் உரையில் அமைச்சர் சிதம்பரம் கூறியதாவது: விவசாய உற்பத்திக்கு உந்து சக்தியாக விவசாய கடன் உள்ளது. 2012,13ம் ஆண்டில் விவசாய கடன் 5,75,000 கோடியாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 2013,14ம் ஆண்டில் இந்த கடன்

தொகை 1.25 லட்சம் கோடி அதிகரிக்கப்படுகிறது. இதன் மூலம் இந்த ஆண்டில் விவசாயிகளுக்கு ரூ.7 லட்சம் கோடி விவசாய கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குறுகிய கால கடனுக்கான வட்டி மானியம் தொடரும். குறித்த காலத்தில் கடனை செலுத்தும் விவசாயிகளுக்கு ஆண்டுக்கு 4% வட்டியில் கடன் வழங்கப்படும். இந்த திட்டம் இதுவரை பொதுத்துறை வங்கிகள், மண்டல கிராம வங்கிகள், கூட்டுறவு வங்கிகளுக்கு மட்டுமே பொருந்துவதாக உள்ளது. இனி இத்திட்டம் தனியார் வங்கிகளுக்கும் பொருந்தும். மேலும் விவசாய அமைச்சகத்துக்கு 2013,14ம் ஆண்டில் கூடுதலாக ரூ.27,049 கோடி ஒதுக்கப்படும். இதில் ரூ.3,415 கோடி விவசாய ஆராய்ச்சிக்கு ஒதுக்கப்படும். உணவு பாதுகாப்பு திட்டத்தை செயல்படுத்த ரூ.10,000 கோடி மானியம் ஒதுக்கீடு செய்யப்படும். இவ்வாறு சிதம்பரம் கூறினார்.

சென்னை , பெங்களூர் இடையே தொழிற்சாலை மேம்பாட்டு திட்டம்

டெல்லி , மும்பை இடையே இப்போது அமைக்கப்பட்டு வரும் தொழில் வளாகங்கள் சாலை திட்டத்தை போல், நாட்டில் மேலும் 2 தொழில் வளாகங்கள் சாலை திட்டம் செயல்படுத்தப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் ஒன்று சென்னை , பெங்களூர் இடையே அமைக்கப்பட உள்ளது. இத்திட்டம் தமிழகம், ஆந்திரா, கர்நாடகா அரசுகளின் உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்துக்காக மத்திய தொழில்துறை கொள்கை மற்றும் ஊக்குவிப்பு அமைப்பு, ஜப்பானின் சர்வதேச கூட்டுறவு அமைப்புடன் கலந்து பேசி விரிவான திட்டத்தை தயாரித்து வருகிறது.

டெல்லி , மும்பை திட்டம் அதிவிரைவாக உருவாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 7 புதிய நகரங்கள் அமைக்கப்பட உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.
சென்னை , பெங்களூர் திட்டத்தை தவிர, குஜராத்தின் தோலெராவில் இருந்து மகாராஷ்டிராவின் செந்திரா பித்கென் இடையிலான திட்டம் 2013,14ல் தொடங்கப்படும். இத்திட்டத்துக்கான நிதியில் பிரச்னை ஏற்பட்டால், அதை அரசு வழங்கும். –

## மேட்டூர் அணை ஒரே நாளில் ஒரு அடி குறைந்தது



மேட்டூர் : மேட்டூர் அணையில் இருந்து நீர் திறப்பு அதிகரிப்பால் நீர்மட்டம் ஒரே நாளில் ஒரு அடிக்கும் அதிகமாக குறைந்துள்ளது. காவிரி டெல்டா பகுதியில் கருகும் நெற்பயிரை காப்பாற்ற உச்சநீதிமன்ற உத்தரவுப்படி கடந்த மாத தொடக்கத்தில் 2 டி.எம்.சி. நீர் திறக்கப்பட்டது. அதன்பிறகு குடிநீர் தேவைக்காக மட்டும் அணையில் இருந்து 600 கனஅடி வீதம் நீர் திறக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் எந்தவித முன் அறிவிப்பும் இன்றி, வினாடிக்கு 6,000 கனஅடி வீதம் நீர் திறந்து விடப்பட்டது. இதனால், நீர்மட்டம் குறையத் தொடங்கியது. நேற்று முன்தினம் 33.99 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று காலை 8 மணி நிலவரப்படி 32.91 அடியாக குறைந்தது. அணைக்கு வினாடிக்கு 623 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. நீர் இருப்பு 8.73 டி.எம்.சி.யாக உள்ளது. நீர் திறப்பு அதிகரிப்பால் நீர்மட்டம் ஒரே நாளில் 1.07 அடி குறைந்துள்ளது. நீர்மட்டம் குறைவதால், அணையின் மீன் வளம் பாதிக்கப்படும் என மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மர்மம் நீடிப்பு: டெல்டா பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் நீர் இன்றி நெற்பயிர் கருகிய நிலையில், இனி பாசனத்திற்கு தண்ணீர் கிடைக்காது என்று கருதி அறுவடை செய்து விட்டனர். இந்நிலையில் எதற்காக நீர் அதிக அளவில் திறந்துவிடப்பட்டுள்ளது என்று தெரியாமல் விவசாயிகள் திகைப்படைந்துள்ளனர்.

வழக்கமாக ஜனவரி மாதம் 28ம் தேதி அணை மூடப்பட்டபின்னர் கோடை காலத்தில் குடிநீர் தேவைக்காக அதிகபட்சமாக 2,000 கனஅடி நீர் திறக்கப்படும். ஆனால், தற்போது 6,000 கனஅடி நீர் திறந்ததற்கான காரணம் குறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது எந்தவித தகவலும் தர மறுக்கின்றனர். –

இன்றைய வேளாண் செய்திகள்
1.03.2013 A.M

## தமிழக விவசாயிகளின் விருப்பமே முக்கியம்: தமிழக முதல்வர்

மத்திய அரசின் கெயில் நிறுவனத்தின் சார்பில் எரிவாயு குழாய் அமைப்பதில், தமிழக விவசாயிகளின் விருப்பத்துக்கு மாறாக தமிழக அரசு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாது என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா, இதுதொடர்பாக இன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பிறகு வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும், சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், தலைமைச் செயலாளரால் மார்ச் 8, 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில், கருத்துக் கேட்பு கூட்டங்களை நடத்த உத்தரவிட்டுள்ளதாகவும், அதுகுறித்த விவரங்கள் பின்னர் தொடர்புடைய விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படும். கெயில் திட்டத்தால் பாதிக்கப்படக்கூடிய விவசாயிகள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில், பங்கேற்று எவ்வித அச்சமுமின்றி தங்களது கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும். விவசாயிகளின் கருத்துக்களை கேட்டறிந்த பிறகு, அவர்கள் பாதிக்கப்படாத வகையில் தமிழக அரசு தக்க முடிவை எடுக்கும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## ஏலக்காய் ஏற்றுமதி 50 சதவீதம் குறையும்

கொச்சி,

உற்பத்தி குறையும் நிலை உள்ளதால், நடப்பு நிதி ஆண்டில் ஏலக்காய் ஏற்றுமதி 50 சதவீதம் சரிவடையும் என ஏற்றுமதியாளர்கள் தெரிவித்துள்ளனர். நடப்பு நிதி ஆண்டில் ஏலக்காய் உற்பத்தி 12,000 டன்னாக குறையும் என கூறப்படுகிறது. சென்ற ஆண்டில் இது 20,000 டன்னாக இருந்தது.

ஏலக்காய் உற்பத்தியில் உலகின் மிகப் பெரிய நாடான கவுதமாலாவில் நடப்பு ஆண்டில் உற்பத்தி அதிகரித்துள்ளது. ஆனால், அந்நாட்டின் இரண்டாம் தர ஏலக்காய்க்கு அரபு நாடுகளில் தேவை குறைந்துள்ளது. அரபு நாடுகள் இந்திய ஏலக்காயையே விரும்புகின்றன. உலக சந்தையில், உயர்

தர இந்திய ஏலக்காய் விலை 1 கிலோ 18 டாலராக உள்ளது. கவுதமாலாவின் தரம் குறைந்த ஏலக்காய் விலை இதைவிட 5 டாலர் குறைவாக உள்ளது.

இந்தியாவில் உற்பத்தி குறைந்துள்ளதால் அந்நாடு இரண்டாம் தர ஏலக்காயை இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்ய பெரிதும் முயற்சி செய்கிறது. நமக்கும் தேவை உள்ளதால் அதை ஈடுகட்ட இறக்குமதியை சார்ந்திருக்க வேண்டிய நிலை உள்ளது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏப்ரல்–நவம்பர் மாத காலத்தில் இந்தியா 1,250 டன் ஏலக்காய் ஏற்றுமதி செய்துள்ளது. இது, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் 4,650 டன்னாக இருந்தது. ஆக, ஏற்றுமதி 60 சதவீதம் குறைந்துள்ளது.

## நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை திடீர் சரிவு 375 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல்,

நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை திடீரென 10 காசுகள் சரிவடைந்து, 375 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

10 காசுகள் சரிவு

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக கிடுகிடு என உயர்ந்து வந்தது. கடந்த 25–ந் தேதி 1 காசு உயர்த்தப்பட்டு, 385 காசுகள் என்ற புதிய உச்சத்தை தொட்டது. அதன்பிறகு 26, 27–ந் தேதிகளில் முட்டை விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டையின் கொள்முதல் விலையை அதிரடியாக 10 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். இதனால் நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 375 காசுகளாக குறைந்து உள்ளது.

காரணம் என்ன?

கேரளாவில் ஈஸ்டர் பண்டிகையையொட்டி முட்டை நுகர்வு குறைந்துள்ளது. பிற மண்டலங்களிலும் முட்டையின் விலை குறைக்கப்பட்டு உள்ளது. இதேபோல நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை குறைக்கப்பட்டு உள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:– ஐதராபாத்–350, விஜயவாடா, தனுகு–350, பார்வாலா–362, சென்னை–381, மைசூர்–379, பெங்களூர்–375, மும்பை–382, டெல்லி–365, கொல்கத்தா–380.

முட்டைக்கோழி கிலோ ரூ.50 ஆக நீடிக்கிறது. அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை. கறிக்கோழி கிலோ ரூ.65–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.5 குறைக்க முடிவு செய்தனர். எனவே கறிக்கோழி விலை கிலோ ரூ.60 ஆக குறைந்து உள்ளது.

## 500 ஏக்கர் விவசாய நிலம் பயன்பெற பொன்னேரிக்குட்டையை தூர்வாரவேண்டும் கலெக்டருக்கு கோரிக்கை

துடியலூர்,

சின்னத்தடாகம் ஊராட்சி மன்ற தலைவர் டி.என்.வேலுச்சாமி, ஒன்றிய கவுன்சிலர் தடாகம் ஆனந்தன் ஆகியோர் கோவை மாவட்ட கலெக்டரிடம் ஒரு கோரிக்கை மனு கொடுத்தனர். அதில் அவர் கூறியிருப்பதாவது:–

கோவை சின்னத்தாடகம் ஊராட்சியின் மேற்கு பகுதியில் பொன்னேரி குட்டை உள்ளது. இது தற்போது முட்புதற்கள் மண்டிக் கிடக்கிறது. பொன்னேரி குட்டையில் முன்பு மழைநீரை தேக்கியது. குட்டையில் இருந்து தண்ணீர் வெளியேறவும் வடிகால் வசதி இருந்தது. இதனால் குட்டையை பயன்படுத்தி விவசாயிகள் பயன் அடைந்து வந்தனர்.

இந்த நிலையில் குட்டையின் சுற்றுப்புற கரைகள் பழுதடைந்து விட்டதாலும், சரியான பராமரிப்பு இல்லாததாலும் குட்டையில் நீரை தேக்க முடிய வில்லை. இதனால் அருகிலுள்ள பெரும்பள்ளத்தில் வரும் மழைநீர் வீணாக சாக்கடையில் கலக்கிறது.

எனவே பொன்னேரி குட்டையில் மழைநீரை சேமிக்க வசதியாக பள்ளத்தில் உள்ள தடுப்பணையை உயரப்படுத்த வேண்டும். குட்டைக்கு தண்ணீர் வரும் வகையில் கால்வாய் வெட்ட வேண்டும். அப்படி செய்தால் சின்னதடாகம் வட்டாரத்தில் உள்ள நஞ்சுண்டாபுரம், பன்னிமடை, மட்டுமின்றி வெள் ளக்கிணறு பகுதி வரை 15–க்கும் மேற்பட்ட கிராமங்களில் நிலத்தடி நீர்மட்டும் வெகுவாக உயரும். சுமார் 500 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும். எனவே பொன்னேரிகுட்டையில் மழைநீரை தேக்கி வைக்கும் வகையில் தூர்வார வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## விவசாயிகளின் நலனுக்காக முதல்–அமைச்சர் பாடுபட்டு வருகிறார் பவுன்ராஜ் எம்.எல்.ஏ. பேச்சு

குத்தாலம்,

விவசாயிகளின் நலனுக்காக முதல் – அமைச்சர் பாடுபட்டு வருகிறார் என்று பவுன்ராஜ் எம்.எல்.ஏ. கூறினார்.

பொதுக்கூட்டம்

குத்தாலம் கடைவீதியில் முதல்–அமைச்சர் ஜெயலலிதா பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு நகர செயலாளரும், பேரூராட்சி மன்றத் தலைவருமான எம்.சி.பாலு தலைமை தாங்கினார். முன்னாள் ஒன்றிய செயலாளர் என்.ரத்தினம், மாவட்ட வழக்கறிஞர் அணி பிரிவு பொருளாளர் செந்தாமரை, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கண்ணையன், பன்னீர்செல்வம், அஞ்சம்மாள் ராஜேந்திரன், பெற்றோர்–ஆசிரியர் கழக இணை செயலாளர் ஜெயபாலகிருஷ்ணன் மற்றும் நகர நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். நகர துணைச் செயலாளர் தாஜ்தீன் வரவேற்று பேசினார்.

இதில் பவுன்ராஜ் எம்.எல்.ஏ., தலைமை பேச்சாளர் புரட்சிவாணன், முன்னாள் எம்.எல்.ஏ. விஜயபாலன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். கூட்டத்தில் பவுன்ராஜ் எம்.எல்.ஏ. பேசியதாவது:–

சமுதாய நாற்றங்கால் திட்டம்

காவிரியில் உரிய நேரத்தில் உரிய தண்ணீர் வராத கடந்த பருவத்தில் சமுதாய நாற்றங்கால் திட்டத்தை கொண்டு வந்து ஏழை விவசாயிகளையும் பாதுகாத்தவர் நம் முதல்–அமைச்சர் ஆவார். அதன்பிறகு விளைநிலங்களை பாதுகாத்திட மும்முனை மின்சாரம் வழங்கியதோடு, இடுபொருட்கள், விவசாய உபகரணங்கள் மானிய விலையில் வழங்கி விவசாயத்தை முதல்–அமைச்சர் பாதுகாத்துள்ளார். 2007–ம் ஆண்டு வழங்கப்பட்ட காவிரி நதிநீர் ஆணையத்தின் இறுதித்தீர்ப்பை, மத்திய அரசிதழில் வெளியிட மறுத்து வந்த நிலையில் உச்ச நீதி மன்றத்தில் முறையிட்டு மத்திய அரசிதழில் காவிரி நதிநீர் ஆணைய இறுதி தீர்ப்பை வெளியிட நடவடிக்கை மேற்கொண்டவர் முதல்–அமைச்சர். இதன் காரணமாக காவிரி நதி நீர் பிரச்சினையில் நமக்குள்ள பாரம்பரிய உரிமையை பாதுகாத்ததோடு தொடர்ந்து விவசாயிகளின் நலனுக்காக முதல்–அமைச்சர் பாடுபட்டு வருகிறார்.

வருகிற பாராளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க.வை 40 தொகுதிகளிலும் வெற்றி பெறச் செய்து, முதல் –அமைச்சரின் கரத்தை வலுப்படுத்தினால் நிச்சயமாக தமிழகத்திற்கு தேவையான அனைத்தையும் பெற்றுத் தருவார் இவ்வாறு அவர் பேசினார். தொடர்ந்து ஆயிரம் பெண்களுக்கு சேலைகள் வழங்கப்பட்டன.

<u>கலந்து கொண்டவர்கள்</u>

கூட்டத்தில் வடக்கு ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன், ஒன்றியக்குழு தலைவர் தமிழரசன், பூம்புகார் தொகுதி செயலாளர் வி.ஜி.கே. செந்தில்நாதன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் விஜயபாலாஜி, மாவட்ட அண்ணா தொழிற்சங்க தலைவர் கணேசன், ஒன்றிய பேரவை செயலாளர்கள் அய்யாராமகிருஷ்ணன், மாரிபாலு, மாணவரணி நிர்வாகிகள் ரூபவாணன், பாலாஜி, சரவணன், தம்பிசேகர், பெருஞ்சேரி முருகன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ஏ. பிள்ளை என்கிற கருணாகரன் நன்றி கூறினார்.

## நாகையில் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் பணிகள் வருவாய் நிர்வாக ஆணையர் ஆய்வு செய்தார்

நாகப்பட்டினம்,

நாகை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் பணிகளை வருவாய் நிர்வாக ஆணையர் ஸ்ரீதர் திடீர் ஆய்வு செய்தார்.

<u>வருவாய் நிர்வாக ஆணையர்</u>

நாகையை அடுத்த சிக்கல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி, நாகூர்–பாலையூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி உள்ளிட்ட வங்கிகளில் நேற்று வருவாய் நிர்வாக ஆணையர் டி.எஸ்.ஸ்ரீதர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது முதல்–அமைச்சர் அறிவித்த வறட்சிக்கான பயிர் நிவாரணம் வழங்கும் பணிகள் முறையாக நடைபெறுகிறதா? என்று ஆய்வு செய்தார். தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் நிவாரணம் வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்த அலுவலர்களிடம் வருவாய் நிர்வாக ஆணையர் ஸ்ரீதர் கூறியதாவது:–

<u>ஓரிரு நாட்களில்...</u>

நாகை மாவட்டத்துக்கு வறட்சி நிவாரணமாக ரூ. 272 கோடியே 23 லட்சம் ஒதுக்கீடு செய்து, முதல்–அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். நிவாரணம் வழங்கும் பணியை துரிதமாக முடிக்க வேண்டும். அரசு ஒதுக்கீடு செய்துள்ள தொகையை விவசாயிகள் வங்கி கணக்குகளில் வரவு

வைக்கும் பணிகளை ஓரிரு நாட்களில் முடிக்க வேண்டும். வருவாய் துறையினர், கூட்டுறவு துறையினர், வேளாண்மை துறையினர் இணைந்து உடனடியாக பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்.

<u>சிரமம் இன்றி...</u>

விவசாயிகளின் வங்கி கணக்குகளில் வரவு வைக்கப்படும் தொகையை விவசாயிகள் எப்போது வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளலாம். முதல்–அமைச்சர் உத்தரவுப்படி விவசாயிகளுக்கு சிரமமின்றி நிவாரணம் வழங்கும் பணியை அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு வருவாய் நிர்வாக ஆணையர் கூறினார்.

தொடர்ந்து நிவாரணம் வழங்கும் பணிகளை நாகை மாவட்டத்தில் விரைவுபடுத்துவது தொடர்பான ஆலோசனை கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் மாவட்ட கலெக்டர் முனுசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் ஆசியாமரியம் உதவி கலெக்டர் மணிகண்டன், வேளாண்மை இணை இயக்குனர் ராஜேந்திரன், கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் ராஜேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பெரம்பலூரில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.15 ஆயிரம் வழங்க கோரி ஆர்ப்பாட்டம்

பெரம்பலூர்

பெரம்பலூரில் வறட்சி யால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ. 15ஆயிரம் வழங்க கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

**ஆர்ப்பாட்டம்**

பெரம்பலூர் புறநகர் பஸ்நிலையத்தில், தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் ஊர்வலம் நடந்தது. இந்தஆர்ப்பாட்டத்திற்கு தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் எஸ்.ஏ.சின்னசாமி தலைமை தாங்கினார். மாநிலச் செயலா ளர் ஆர்.ராஜா சிதம்பரம் முன்னிலைவகித்தார்.

**விளம்பர தட்டி**

பெரம்பலூர் புதிய பஸ் நிலையத்தில் வைக்கப் பட்டுள்ள உழவர் பெருந் தலைவர் நாராயணசாமி நாயுடுவின் சிலையை அவ மதிக்கும் வகையில் வைக்கப் பட்டுள்ள விளம்பர பதாகை களை

அகற்றிட வேண்டும். பொதுஇடங்களில் விளம்பர தட்டிகள் வைக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ள அர சாணையை அமல்படுத்த வேண்டும்.

மேலும், அனுமதியின்றி விளம்பர தட்டிகள் வைக்கப் படும் நபர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**ரூ.15 ஆயிரம்**

வறட்சியால் பாதிக்கப்பட்ட மானாவாரி மற்றும் கிணற்றுப்பாசன விவசாயி களுக்கு இயற்கை பேரிடர் நிதியில் இருந்து ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும். வறட்சியால் சாகுபடி செய்ய முடியாத, சாகுபடி செய்து பாதிக்கப் பட்ட விவசாயிகள், கிராம கூட்டுறவு மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் வாங்கிய பயிர்க்கடனை மத்திய, மாநில அரசுகள் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**முறையான மின் விநியோகம்**

பதிவேட்டில் மின் மோட்டார் பெற்று பதிவு செய்த விவசாயிகளுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்கி, கூடுதல் இழப்பீட்டை ஒதுக்க வேண்டும். பழுதடைந்து மின் கம்பங்கள், கம்பிகளை சீரமைத்து முறையான மின் விநியோகம் செய்ய வேண்டும். பசும்பால் விலை லிட்டருக்கு 5 ரூபாய், எருமை பால் விலை லிட்டருக்கு 8 ரூபாய் விலை உயர்த்த வேண்டும். போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி முன்னதாக, சங்குப் பேட்டை யில் இருந்து பாலக்கரை வழியாக புறநகர் பஸ்நிலையம் வரை கோரிக்கைகளை வலி யுறுத்தி நடந்த ஊர்வலத்தை மாநிலப் பொதுச்செயலாளர் கே.சுந்தரம், ஆர்ப்பாட்டத்தை மாநிலப் பொருளாளர் கே.பி.வேலுமணிதொடங்கி வைத்தனர்.

**கலந்து கொண்டவர்கள்**

இதில் பெரம்பலூர் மாவட்ட நிர்வாகிகள் பி.மாணிக்கம், வி.நீலகண்டன், ஏ.மணி, அரியலூர் மாவட்ட பொறுப்பாளர்கள் என்.பி.அன்பழகன், வி.விஸ்வ நாதன், திருச்சி மாவட்ட பொறுப்பாளர்கள் ம.ப.சின்ன துரை, என்.கணே சன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கரிசல் மண் நிறைந்து கிடக்கும் எப்போதும்வென்றான் அணையை தூர்வார வேண்டும் விவசாயிகள் கோரிக்கை

ஓட்டப்பிடாரம்,

எப்போதும்வென்றான் அணையை தூர்வார வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

<u>நீர்த்தேக்கம்</u>

தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு, கழுகுமலை, கடம்பூர் ஆகிய பகுதிகளில் பெய்த மழை நீர், வண்டானம், எப்போதும்வென்றான் வழியாக வேப்பலோடை அருகே கடலில் கலந்து வந்தது. கடலில் வீணாக கலக்கும் அந்த மழை நீரை தடுத்து, எப்போதும்வென்றான் அருகே அணை கட்ட வேண்டும் என இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த கோரிக்கையை ஏற்று, தமிழ்நாடு அரசு கடந்த 17101974ம் ஆண்டு எப்போதும்வென்றான் கிராமத்துக்கு மேற்கே புதிய அணை கட்ட தொடங்கியது. 30061976ம் ஆண்டு புதிய அணை கட்டி முடிக்கப்பட்டு விவசாய பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

3.25 மீட்டர் உயரமும், 120 மில்லியன் கன அடி வரை நீர்த்தேக்கி வைக்கக் கூடிய கொள்ளளவு கொண்டதாக அந்த அணை கட்டப்பட்டது. இந்த அணையில் தேங்கும் நீரை பயன்படுத்தி எப்போதுவென்றான், காட்டுநயக்கன்பட்டி, ஆதனூர் ஆகிய கிராமங்களில் உள்ள சுமார் 437.78 எக்டர் விவசாய நிலங்கள் பயன்பெற்றன. தென்மாவட்டங்களில் குறைந்த அளவு மழை பெய்தாலும் எப்போதும்வென்றான் நீர்த்தேக்கம் நிரம்பி வந்தது

<u>தரிசாக மாறியது</u>

எப்போதுவென்றான் நீர்த்தேக்கம் கட்டப்பட்ட ஆண்டில் இருந்து ஆண்டுக்கு ஆண்டு மழை நீருடன் கரிசல் மண்ணும் அணைக்கு வந்து கொண்டே இருந்தது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 5 சென்டி மீட்டர் வரை மண் நிரம்பி, 5 மில்லியன் கன அடி வரை தண்ணீர் கொள்ளளவு குறைந்து கொண்டே வந்ததது. கரிசல் மண் நிரம்பியதால் தற்போது அணையின் உயரம் 1.50 மீட்டருக்கும் குறைவாக உள்ளது. மேலும் அணையின் கொள்ளளவு 55 மில்லியன் கன அடிக்கும் குறைவாக மாறிவிட்டது.

தற்போது அணையில் தேங்கும் தண்ணீர் எப்போதுவென்றான் கிராம விவசாயிகளுக்கு மட்டுமே கிடைக்கும். இதனால் காட்டுநயக்கன்பட்டி, ஆதனூர் விவசாயிகள், போதிய தண்ணீர் இன்றி தங்கள் விளை நிலங்களை தரிசு நிலங்களாக போட்டு விட்டனர்.

<u>பழுதடைந்த மதகு</u>

எனவே இந்த அணையை தூர்வார வேண்டும் என்று இந்த பகுதி விவசாயிகள் தொடர் போராட்டங்களை நடத்தி வந்தனர். இதனால் அணையை தூர்வாருவதற்கு, பொதுப்பணித்துறை நீர் வள ஆதார அமைப்பு மூலம் கடந்த 6 வருடங்களுக்கு முன் ரூ.11 கோடி 50 லட்சம் செலவில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. ஆனால் அணை தூர்வாரப்படவில்லை. இதனால் அணையில் உள்ள மதகுகளும் பழுதடைந்து கிடக்கிறது. இதனை சீரமைத்து அணையை தூர்வார வேண்டும் என்று விவசாயிகளின் கோரிக்கை வலுத்து உள்ளது.

<u>போராட்டம்</u>

இதுகுறித்து எப்போதுவென்றான் பஞ்சாயத்துதலைவர் கணபதியம்மாள் கூறுகையில், அணையில் கரிசல் மண் நிரம்பி அணையின் கொள்ளளவு குறைந்து விட்டது. கடந்த 6 வருடங்களுக்கு முன் ரூ.11 கோடி 50 லட்சம் செலவில் திட்ட மதிப்பீடு தாயரிக்கப்பட்டது. இத்திட்டம் தற்போது கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதனால் அணையை தூர்வார அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் தொடர் போராட்டம் நடைபெறும் என்றார்.

<u>நடவடிக்கை</u>

இதுபற்றி ஜி.வி.மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ. கூறுகையில், எப்போதும்வென்றான் அணையை தூர்வார வேண்டும் என்று சட்டசபையில் இரண்டு முறை வலியுறுத்தி உள்ளேன். மேலும் அணையை தூர்வார பொதுப்பணித் துறை அமைச்சருக்கு கோரிக்கை மனுவும் கொடுத்துள்ளேன் விரைவில் அணை தூர்வார நடவடிக்கை எடுக்கப்படும் என கூறினார். மேலும் அணையின் கரையையும் அகலப்படுத்தி சாலை அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று கூறினார்.